ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2148/21 - 2019 නොවැම්බර් මස 05 වැනි අඟහරුවාදා - 2019.11.05

*2148/21 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2019.09.21 ஆந் திகதிய 2141/87 ஆம் இலக்க, 2019.10.27 ஆந் திகதிய 2146/39 ஆம் இலக்க இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்ற வேண்டிய ஊடக வழிகாட்டி நெறிகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் மேலதிகமாக வெளியிடப்படுகின்ற ஊடக வழிகாட்டு நெறிகள்

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சம்பந்தமாக “அமைதிக் காலம்” என்பது, தேர்தலை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தினத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு பெறுபேறுகள் வெளியிடும் காலம் வரையான காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியினுள் அரசியல் கட்சியொன்றை அல்லது வேட்பாளர் ஒருவரை ஊக்குவிப்பதற்கு அல்லது பாதிப்புக்குட்படுத்துவதற்கு காரணமாக அமையும் பிரகாரம் எந்தவிதமான பிரசார நடவடிக்கை அல்லது பிரசார அறிவித்தல்களை பகிரங்கப்படுத்தல் கூடாது.

எவ்வாறாயினும், அமைதிக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னைய தினத்தில் அரசியல் கட்சி அல்லது வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக நடாத்தப்படும் கூட்டங்கள் சம்பந்தமான அறிக்கைகள், அக்கூட்டங்கள் நடாத்தப்பட்ட தினத்திற்கு அடுத்த தினம் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் செய்தி ஒளி/ ஒலிபரப்புச் செய்யப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் மாத்திரம் போட்டியிடும் கட்சிக்கு அல்லது வேட்பாளருக்குச் சமமான காலப்பகுதியொன்று ஒதுக்கப்படும் வகையில் ஒளி/ஒலிபரப்புச் செய்ய முடியும். அத்துடன் குறிப்பிட்ட இறுதிப் பிரசாரக் கூட்டம் நடாத்தப்பட்ட தினத்திற்கு அடுத்த தினம் வெளியிடப்படுகின்ற செய்திப் பத்திரிகைகளிலும் இறுதிக் கூட்டங்களின் அறிக்கைகளை எந்தவொரு கட்சிக்கோ அல்லது வேட்பாளருக்கோ விசேட கவனம் செலுத்தப்படாத பிரகாரம் வெளியிட முடியும்.

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய,<br>தவிசாளர்,<br>தேர்தல் ஆணைக்குழு. | என். ஜே. அபேசேகர,<br>அங்கத்தவர்,<br>தேர்தல் ஆணைக்குழு. | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,<br>அங்கத்தவர்,<br>தேர்தல் ஆணைக்குழு. |

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2019, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி.

*11-1407*

1A - PG 4742— 167 (2019/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*